ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2287/26 - 2022 ජූලි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.07.07
2287/26 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

**அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) (அ) ஆம் உப உறுப்புரையின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2022, யூன் மாதம் 09 ஆந் திகதிய 2283/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் 2022, யூன் மாதம் 27 ஆந் திகதிய 2286/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட, 2022, மே 27 ஆந் திகதிய 2281/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, 2022, யூலை மாதம் 07 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மேலும் திருத்தப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2022, யூலை 07.

1A - G 37047 — 366 (2022/07)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*(1)* அவ்வறிவித்தலில் இல "1. பாதுகாப்பு அமைச்சர்' எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

*(அ)* அதன் II ஆம் நிரலில் இல. 17 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

*(2)* அவ்வறிவித்தலில் இல. "18. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :

*(அ)* அதன் II ஆம் நிரலில் இல. 3 மற்றும் 4 ஆகிய விடயங்களை நீக்குவதன் மூலம்;

*(ஆ)* அதன் II ஆம் நிரலில் இல. 5 இலிருந்து 21 வரையுள்ள விடயங்கள் முறையே இல. 3 இலிருந்து 19 வரையாக மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

*(3)* அவ்வறிவித்தலில் இல. "29. முதலீட்டு மேம்பாடு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

*(அ)* அதன் II ஆம் நிரலில் இல. 7 எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;

8. ரக்னா ஆரக்சன லங்கா கம்பனி
9. செலென்திவ இன்வெஸ்டமென்ட் லிமிட்டெட்
10. ஹொட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) தனியார் கம்பனி (PQ143)அட்டவணை (தொடர்ச்சி)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.